LIBRARY
11 JAN 2010
Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY, SRI LANKA
## Faculty of Commerce and Management
### First Examination in Bachelor of Business Administration 2006/2007 (Proper/Repeat) and Bachelor of Economics - 2007/2008 (Proper/Repeat) (Dec'2009/Jan'2010) (External)
### EXB/EXE 1052 Career Guidance

**Answer all four (4) questions** **Time: 02 hours**

எல்லா வினாக்களுக்கும் விடை அளிக்குக. நேரம்: 02 மணித்தியாலங்கள்

**Q1.**

a. ஒரு தொழில் (a job) மற்றும் ஒரு வாழ்க்கைத்தொழில் (a career)என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடு யாது? அத்துடன் வாழ்க்கைத்தொழிலின் இயல்புகள் (characteristics of career) எவை எனவும் அடையாளம் காண்க.

(08 புள்ளிகள்)

b. உங்களால் தெரிவு செய்யக் கூடியதாக இருக்கும் ஒரு வாழ்க்கைத்தொழில், எவ்வழிவகைகளில் உங்களது வாழ்கையைப் பாதிக்கும் எனக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

c. ஹொலண்ட்டின் கோட்பாடானது (Holland's Theory) ஆறு வகையான வேலைச் சூழ்நிலைகளையும் (work environments) ஆளுமை வகைகளையும் (personality types) முன்வைத்துள்ளது. இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, எவ்வகையான ஆளுமை வகைகள், எவ்வகையான வேலைச் சூழ்நிலைகளுடன் மிகவும் பொருத்தமாகவும் (most compatible), பொருத்தமாகவும் (compatible) இருக்கும் என்பதை அடையாளம் காண்க.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

**Q2.**

a. வாழ்க்கைத்தொழில் அபிவிருத்தியின் (career development) நான்கு கட்டங்களையும் (stages) அடையாளம் கண்டு, விபரிக்குக.

(08 புள்ளிகள்)

b. இலங்கையில், வணிக மற்றும் முகாமைத்துவ தொழில்துறையில் (field of Business and Management), நுழைவு நிலை/மட்டத் (entry level) தொழில்களுக்கான தேவைப்பாடுகளை (job requirements) விபரிக்குக.

(10 புள்ளிகள்)

c. ஒரு வாழ்க்கைத்தொழிலை (a career) அல்லது அதற்கான துறையைத் தெரிவு (career field) செய்யும் முன் உங்களைப்பற்றி, நீங்கள் அறிந்து கொள்ளுத்தல் ஏன் மிகவும் முக்கியமானது? அத்துடன் ஒரு வாழ்க்கைத் தொழிலை ஆராயும் போது, எவ்வாறான தொழில் இயல்புகளை (job characteristics) நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்?

(07 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

**Q3.**

a. "வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல்" ("career guidance") என்பது யாது? வாழ்க்கைத்தொழில் வழிகாட்டலின் அடிப்படையான ஐந்து சேவை வகைகள் (five basic categories of services) எவை?

(08 புள்ளிகள்)

b. இலங்கையில் முன்னணி வகிக்கும் வர்த்தக வங்கி ஒன்றில் முகாமைத்துவ பயிலுனருக்கான (Management Trainee) ஓர் நேர்காணலை (an interview) நீங்கள் எதிர்நோக்கியுள்ளீர்கள் எனக் கொண்டு, அவ்நேர்காணலுக்கு எவ்வாறு நீங்கள், உங்களைத் தயார்படுத்துவீர்கள் என்பதை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

c. ஒரு தொழில் தேடல் செய்முறையில் (a job searching process), சுயவிபரக் கோவை (Resume/Bio-data) மற்றும் தனிப்பட்ட வலைப்பின்னல் தொடர்புகளின் (Personal Networks) முக்கியத்துவத்தை விபரிக்குக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

**Q4.**

a. ஒரு நபரின் 'தன்னால் செய்ய முடியும் எனும் நம்பிக்கை' (self efficacy), எவ்வாறு உருவாகின்றது என்பதையும், அது அந்நபரின் வாழ்க்கைத்தொழில் தெரிவில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதையும், சமூகச் சிந்தனை சார் வாழ்க்கைத்தொழில் கோட்பாட்டின் அடிப்படையில் (Social Cognitive Career Theory) சுருக்கமாக விபரிக்குக.

(10 புள்ளிகள்)

b. பின்வரும் விடயங்கள் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

i. எனியக்கிராம் சோதனை (The Enneagram Test)

(05 புள்ளிகள்)

ii. குணாம்சக் காரணி அணுகுமுறை (The Traits Factor Approach)

(05 புள்ளிகள்)

iii. வாழ்க்கைத்தொழில் முகாமைத்துவப் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் (Career Management related Issues and Solutions)

(05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)